நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No. 85/2025**

**P.W.1 -ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம் | : | கூராண்டிபுதூர் |
| வட்டம் | : | நவப்பட்டி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 42 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026-ஆம் வருடம், மார்ச் மாதம், 13-ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 12.04 PM.

1. தெர்மலில் கடந்த 8 மாதங்களாக தான் வேலை செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்ய இயலும் என்ற சொன்ன வருமான வரி அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு அறிக்கை ஆகியவற்றை நான் இன்று கொண்டு வரவில்லை. எதிரிக்கு திருமணம் ஆகிவிட்டதா, குழந்தைகள் உள்ளனரா என்று எனக்கு தெரியாது.

2. நான் டான் என்ஜினியரிங் கம்பெனியில் வேலை செய்யும்போது அலைபேசியில் அவருடன் தொடர்பு கொண்டு பலமுறை பேசியுள்ளேன். அவருடைய செல்போனை

எண் தற்போது என்னால் சொல்லமுடியாது. என்னுடைய செல்போன் எனக்கு விபத்து ஏற்படும்போது தொலைந்து விட்டது. செல்போனை பார்த்தும் தற்போது அவருடைய எண்ணை என்னால் சொல்ல முடியாது.

3. என்னுடைய அலைபேசி எண். 8883332799 ஆகும். இந்த செல்போன் எண் மூலமாக தான் நான் எதிரியுடன் பேசி வந்தேன். எதிரியை மேற்கண்ட அலைபேசியிலிருந்து நான் 2021 காலகட்டத்தில் இருந்து 2024 வரை பேசி வந்தேன். எதிரியின் செல்போன் எண் எந்த கம்பெனி என்று எனக்கு தெரியாது. மேற்படி கம்பெனியில் வேலை செய்ததற்கான ESI, PF, உள்ளிட்ட விவரங்கள் சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் எனக்கு கிடைக்கபெறவில்லை. அந்த நிறுவனத்தில் நான் ரொக்கமாகதான் நான் சம்பளம் வாங்கினேன்.

4. தற்போது அந்த கம்பெனி இயங்கி வருகிறது. கோயமுத்தூரை சார்ந்த ராமநாதகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி வெங்கடலட்சுமி ஆகியோர்களை எனக்கு தெரியாது. எதிரிக்கும் மேற்படி நபர்களுக்கும் பணபரிவர்த்தனை நடைபெற்று அதன் தொடர்பாக கோயமுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 1068/2024 என்ற வழக்கு நடைபெற்று இன்று வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. மேற்படி ராமநாதகிருஷ்ணன் மற்றும் எதிரி அருணன், எதிரியின் நண்பர் ரமேஷ் ஆகியோர்களுக்கிடையே கடந்த 14.06.2022 ம் தேதி ஒரு கடன் பத்திரம் ஏற்படுத்தி கொண்டது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஏற்கனவே மேற்படி ஏற்படுத்திகொண்ட கடன் பத்திரத்தில் இந்த வழக்கு காசோலை எண். 987601, 987602, எதிரியன் நண்பர் ரமேஷ் கொடுத்த காசோலைகளை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி காசோலைகள் ராமநாதகிருஷ்ணனுக்கு தான் கொடுக்கப்பட்டது என்றாலும், அதனை வைத்து நான் வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றாலும், சரியல்ல. எனக்கு எதிரியை யார் என்றே தெரியாது என்றாலும், அவரை பற்றி முழுவிவரங்ககளை என்னால் தெரிவிக்கஇயலாத காரணத்தாலும், நான் உண்மையில் எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது வழக்கு தொடுக்க என்னிடம் அவர் சட்டப்பூர்வமான கடன் பெற்றிருக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை சட்டப்பூர்வ மறுபயனுக்காக எனக்கு

கொடுக்கபட்டது அல்ல என்றால் சரியல்ல.

7. எதிரி என்னிடம் 2024 வருடம் ஆகஸ்ட் மாதத்தில் காசோலை கொடுத்தார். இந்தியன் வங்கி காசோலை ஆகும். காசோலை எண். எனக்கு தற்போது தெரியாது. எந்த வங்கி கிளை என்று எனக்கு தெரியாது. கோயமுத்தூரில் உள்ள ராமநாதகிருஷ்ணனுக்கு ஆதரவாக அவர் கேட்டு கொண்டதற்க இணங்க எதிரியை பற்றி எந்த விவரமும் தெரியாமலும், வழக்க காசோலை பற்றி எந்த விவரமும் தெரியாமலும், எதிரியிடம் துர்லாபம் அடையும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. உண்மையில் எதிரி எந்த கம்பெனியிலும் வேலை செய்தது இல்லை என்றாலும், எதிரியை யார் என்று தெரியாத பட்சத்தில் எந்த காலகட்டத்திலும், போன் மூலமாக எதிரியை நான் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், கோயமுத்தூர் காளப்பட்டியில் உள்ள டான் கம்பெனியில் பணிபுரிந்தபோது பழக்கம் என்று சொன்னது எல்லாம் இந்த வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 7 வருடங்களாக மேற்சொன்ன ஒரேஒரு செல்போன் எண்ணைதான் JIO நெட்வொர்க் மூலம் பயன்படுத்தி வருகிறேன். கடந்த 2019ம் வருடத்தில் இருந்தே JIO prepaid Network யை தான் பயன்படுத்தி வருகிறேன்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.33 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**